## பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

### வலு

1986 இல் வலுத்துறையின் போக்குகள் மிகச் சாதகமாக இருந்தன. பெற்ரோலியத்தின் குறைந்த இறக்குமதி விலைகள், உள்நாட்டு மூலவளங்களில் அதிகரித்த பயனை விளைவித்த நீர்மின்வலு இயலளவின் பெருமளவு பயன்பாடு என்பன இம்முன்னேற்றத்திற்குப் பொறுப்பாக இருந்த முதன்மைக் காரணிகளாகும்.

நீர்மின்வலுவின் அதிகரித்த நிறுவப்பட்ட இயலளவு, பொறிகளைத் தொடர்ச்சியாகத் தொழிற்படுத்துவதற்கு நீர்த்தேக்கத்தில் போதுமானளவு நீர்மட்டம் கிடைக்கத்தக்கதாக இருந்தமையுடன் சேர்ந்து 1986 இன் மின்வலுவிற்கான கேள்வி முழுவதையும் ஏறத்தாழ ஈடுசெய்வதற்குப் போதுமான நீர்மின்வலுவை உருவாக்கக்கூடியதாக இருந்தது. இதுவெப்ப மின்வலு உருவாக்கத்தினை மிகக் குறைந்த மட்டத்திற்குக் குறைவடையச் செய்ததன்மூலம் மின்வலுவின் செலவினை மட்டுமன்றி மின்வலு உருவாக்கத்திற்கு பெற்ரோலியத்தின்மீது தங்கியிருப்பதனையும் குறைத்தது. இதன்விளைவாக வர்த்தக வலுவின் மொத்த வழங்கலில் மின்வலு தொடர்பான பங்கு 1985 இன் 38 சதவீதத்திலிருந்து 1986 இல் 40 சதவீதத்திற்கு அதிகரித்தது. மறுபுறத்தில் பெற்ரோலியத்திற்கான குறைவடைந்த கேள்வி பன்னாட்டுச்சந்தையில் தாழ்வுற்ற எண்ணெய் விலைகளுடன் சேர்ந்து குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுச் செலாவணிச் சேமிப்பை விளைவித்ததன் மூலம் சென்மதி நிலுவையின்மீதான தாக்கத்தையும் குறைத்தது.

விறகு, வேளாண்மை எச்சங்கள், மற்றும் விலங்குக்கழிவு என்பனவற்றை உள்ளடக்கிய வர்த்தகமல்லா வலு மூலங்கள் ஏனைய மரவகை எரிபொருட்களுடன் சேர்ந்து தொடர்ந்து 1986 ஆம் ஆண்டிலும் இலங்கையின் மிகப் பெரும் வலு மூலமாக இருந்தது. 1986 இன் மூலங்கள் 43 இலட்சம் தொன் எண்ணெய்க்குச் சமமானதாக விளங்கி நாட்டின் மொத்தவலு வழங்கலில் ஏறத்தாழ 70 சதவீதத்திற்குப் பங்களித்தது. அதேவேளை பெற்ரோலியம், மின்வலு, திரவப்பெற்ரோலிய வாயு, மற்றும் சிறிதளவு நிலக்கரி என்பன நாட்டின் மொத்த வலுப் பயன்பாட்டில் ஏறத்தாழ 30 சதவீதத்திற்கு வகைகூறின.

இலங்கையில் மீண்டும் மீண்டும்கிடைக்கத்தக்கதாகவுள்ள வர்த்தக வலுவின் மிகப்பெரும் மூலமாக விளங்கும் மின்வலு 1986 இன் மொத்த வலு வழங்கலில் ஏறத்தாழ 12 சதவீதத்திற்குப் பங்களித்தது. 1985 இல் 746 மெகாவாட் நீர்மின்வலுவையும் 270 மெகாவாட் வெப்பமின் வலுவையும் உள்ளடக்கி 1,016 மெகாவாட்டுக்களாகக் காணப்பட்ட இலங்கை மின்சபையின் மொத்த நிறுவப்பட்ட இயலளவு 1986 இறுதியில் 1,010 மெகாவாட்டுக்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதற்குப் புறக்கோட்டையில் உள்ள 6 மெகாவாட் இயலளவினைக் கொண்ட டீசல் வலு நிலையம் செயற்படாமல் இருந்தமையே காரணமாகும். கொத்மலை நீர்மின்வலுசெயற்றிட்டம் (2 × 67 மெகாவாட்) பேணல் வேலைகள் காரணமாகத் தொழிற்படாமல் இருந்தபோதும் இரந்தெனிகல நீர்மின்வலுச் செயற்றிட்டம் (2 × 61 மெகாவாட்) பரீட்சார்த்த அடிப்படையில் தொழிற்பட்டு 1986 இன் மொத்த நீர்மின்வலுவில் 6 சத வீதத்தினை உருவாக்கியது.

1986 இல் இலங்கை மின்சபையின் மொத்தவலு உருவாக்கம் 26,530 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களாக விளங்கி 1985 இல் உருவாக்கப் பட்ட 24,640 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களைவிட 8 சதவீதம் உயர் வானதாக இருந்தது. 1986 இல் அதிகரித்த நீர்மின்வலு உருவாக்கத்துடன் 1985இல் 3 சதவீதமாக அமைந்திருந்த வெப்பமின்வலுவின் பங்கு 1986இல் மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியுற்றது. இதன்விளைவாக வெப்பமின்வலு உருவாக் கத்தின் எரிபொருள் செலவு 1985 இன் ரூ. 930 இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 120 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

மின்வலுவின் அதிகரித்த உருவாக்கத்துடன், விற்பனையிலும் அதே போன்ற விரிவாக்கம் காணப்பட்டது. மின்வலுவின் மொத்த விற்பனை 1985 இல் 20,610 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களிலிருந்து 1986 இல் 22,340 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களுக்கு 8 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு வீடு,கைத்தொழில் துறைகள் இரண்டிலும்நுகர்வோரின் எண்ணிக்கை விரிவடைந்த மையே முக்கிய காரணமாகும். கைத்தொழில்துறையின் மின்வலு நுகர்வு இலங்கை மின்சபையின் மொத்த விற்பனையில் 41 சதவீதமாக இருந்தது. வீடு, வர்த்தகத் துறைகள் ஒவ்வொன்றும் 17 சதவீதத்தினை நுகர்ந்தவேளையில் உள்ளூராட்சி மன்றங்களின் கொள்வனவுகள் 24 சதவீதமாக இருந்தன. மிகுதி சாலை விளக்கு களுக்கும் ஏனையநோக்கங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. உள்ளூராட்சி மன்றங் களின் தொகை வடிவிலான கொள்வனவுகளில் வீடு, வர்த்தக, கைதொழில் துறைகள் முறையே ஏறத்தாழ 65 சதவீதத்தினையும், 25 சதவீதத்தினையும் 10 சதவீதத்தினையும் நுகர்ந்தன. 1985 மாச்சு 1 ஆம் நாளில் அறிமுகப்படுத்தப் பட்ட புதிய மின்வலுத் தீர்வை அமைப்பு 1986 முழுவதும் மாற்றமின்றி யிருந்தது.

உலக எண்ணெய்ச் சந்தையில் அவதானிக்கப்பட்ட கீழ்நோக்கிய விலை அசைவு கள் 1986 இல் சில பெற்றோலிய உற்பத்திகளுக்கான குறைவடைந்த கேள்வியுடன் சேர்ந்து பெற்றோலிய இறக்குமதிகள் கணக்கின் மீதான வெளிநாட்டுச் செலாவணிச் செலவு முன்னைய ஆண்டினைவிடக் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவடைவதற்குக் காரணமாக இருந்தது. 1985 இன் மொத்த இறக்குமதியில் 21 சதவீதத்திற்கு வகைகூறிய பெற்றோலியத்தின் மீதான இறக்குமதிச் செலவு 1986 இன் 11 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதி ரூபா நியதிகளில் 1985 இன் ரூ. 110,280 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 3,990 இலட் சம்) 1986 இல் ரூ. 62,910 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,920 இலட்சம்) 43 சத வீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 52 சதவீதம்) மிகக்கூடியளவில் வீழ்ச்சியடைந்தது. 1986 இல் மசகெண்ணெயின் சராசரி கொள்வனவு விலை (க.ஏ.பெ.) 1985 இன் பீப்பாய் ஒன்றின் விலையான ஐ.அ.டொலர் 28.40 உடன் ஒப்பிடுகையில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ. டொலர் 16.26 ஆக இருந்தது. மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் இரண்டினதும் இறக்குமதிகள் 1985 இல் 1,657,469 மெற்றிக்தொன், 181,818 மெற்றிக் தொன்களிலிருந்து 1986 இல் முறையே 1,638,547 மெற்றிக் தொன்களுக்கும் 147,466 மெற்றிக் தொன் களுக்கும் வீழ்ச்சியடைந்தது.

பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகள் 1985 இன் 725,685 மெற்றிக் தொன்களிலிருந்து 1986 இல் 724,051 மெற்றிக் தொன்களுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. எனினும் ஏற்றுமதி வருவாய்கள் 1985 இல் ரூ. 38,770 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,400 இலட்சம்) 1986இல் ரூ. 23,520 இலட்சத்திற்கு

(சிஎஉ 720 இலட்சம்) ரூபா நியதிகளில் 39 சதவீதத்திஞல் மிகக்கூடியளவில் (சிஎஉ நியதிகளில் 49 சதவீதம்) வீழ்ச்சியடைந்து உலகளாவிய ரீதியில் எண்ணெய் விலைகள் வீழ்ச்சியடைந்தமையைப் பிரதிபலித்தது. இதனுல் பெற்ருேலிய இறக்குமதிகளின் காரணமாக ஏற்பட்ட தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கடப்பாடு 1985 இன் ரூ. 71,520 இலட்சத்திலிருந்து (சிஎஉ 2,590 இலட்சம்) 1986 இல் ரூ. 30,390 இலட்சத்திற்கு (சிஎஉ 1,200 இலட்சம்) 45 சதவீதத்திஞல் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.20

**வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1985 – 1986**

| விடயம் | அலகு | 1985 | 1984க்கு மேலாக சதவீத மாற்றம் | 1986 | 1985க்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| **1. பெற்ருேலிய உற்பத்திகள்** | | | | | |
| 1.1 ஏற்றுமதிகள் ... | ரூ. ப. இ. | 3,876.5 | 17.9 | 2,351.7 | — 39.3 |
| | சிஎஉ ப.இ. | 140.3 | 11.3 | 71.5 | — 49.0 |
| 1.2 இறக்குமதிகள் ... | ரூ. ப. இ. | 11,028.0 | 3.2 | 6,290.7 | — 43.0 |
| | சிஎஉ ப.இ. | 399.1 | — 2.7 | 192.2 | — 51.8 |
| 1.3 இறக்குமதி செய்யப்பட்ட தொகை | மெ. தொ. | | | | |
| 1.3.1 மசகெண்ணெய் ... | ,, | 1,657,469 | — 4.4 | 1,638,547 | — 1.1 |
| 1.3.2 சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ... | ,, | 181,818 | 40.5 | 147,446 | — 18.9 |
| 1.3.3 ஏனைய உற்பத்திகள் ... | ,, | 20,774 | — 13.1 | 28,323 | 36.3 |
| 1.4 மசகெண்ணெயின் சராசரி விலை ... | ரூ./பீ. ஒ. | 775.30 | 2.8 | 454.26 | — 41.41 |
| | ஐ.அ.டொ./ பீ. ஒ. | 28.40 | — 4.2 | 16.26 | — 42.75 |
| 1.5 உள்நாட்டு விற்பனைகள் | மெ. தொ. | | | | |
| 1.5.1 சிறப்புப் பெற்ருேல் ... | ,, | 121,578 | 2.3 | 130,624* | 7.4 |
| 1.5.2 தன்னியக்க டீசல் ... | ,, | 488,519 | 1.5 | 488,907* | 0.1 |
| 1.5.3 பார டீசல் ... | ,, | 23,568 | — 63.3 | 20,126* | — 14.6 |
| 1.5.4 சிறப்பு டீசல் ... | ,, | 13,555 | — 6.3 | 15,871* | 16.8 |
| 1.5.5 மண்ணெண்ணெய் ... | ,, | 153,655 | 1.8 | 154,182* | 0.3 |
| 1.5.6 உலைஎண்ணெய் ... | ,, | 142,868 | — 34.7 | 129,753* | — 9.2 |
| 1.6 உள்நாட்டு விலை | ரூ./இலிற்றர் | | | | |
| 1.6.1 சிறப்புப் பெற்ருேல் ... | | 13.50 | — | 13.50 | — |
| 1.6.2 தன்னியக்க டீசல் ... | | 8.13 | — | 8.13 | — |
| 1.6.3 பார டீசல் ... | | 7.83 | — | 7.83 | — |
| 1.6.4 சிறப்பு டீசல் ... | | 9.28 | — | 9.28 | — |
| 1.6.5 மண்ணெண்ணெய் ... | | 6.58 | — | 6.58 | — |
| 1.6.6 உலை எண்ணெய் | | | | | |
| 500 செக்கண்ட் ... | | 5.22 | 6.8 | 4.22 | 19.1 |
| 800 செக்கண்ட் ... | | 4.87 | 0.6 | 3.87 | 20.5 |
| 1000 செக்கண்ட் ... | | 4.72 | — | 3.72 | 21.2 |
| 1.6.7 நிலக்கீல் ... | ரூ./கி.கி. | 7.06 | — | 7.06 | — |
| **2. மின் வலு** | | | | | |
| 2.1 நிறுவப்பட்ட இயலளவு ... | மெ. வா. | 1,016.25 | 25.1 | 1,010.25 | — 0.6 |
| 2.1.1 நீர் மின் ... | ,, | 746.25 | 37.6 | 746.25 | — |
| 2.1.2 வெப்ப மின் ... | ,, | 270.0 | — | 264.0 | — 2.2 |
| 2.2 உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் ... | ப.இ.கி.வா.ம | 2,644.0 | 9.0 | 2,652.8 | 7.7 |
| 2.2.1 நீர் மின் ... | | 2,395.0 | 14.6 | 2,645.3 | 10.5 |
| 2.2.2 வெப்ப மின் ... | | 69.0 | 59.4 | 7.5 | — 89.1 |
| 2.3 மொத்த விற்பனைகள் ... | | 2,060.6 | 9.8 | 2,234.0 | 8.4 |
| 2.3.1 உள்நாடு ... | | 346.3 | 9.3 | 377.0* | 8.9 |
| 2.3.2 கைத்தொழில் ... | | 850.4 | 7.5 | 922.0* | 8.4 |
| 2.3.3 வர்த்தகம் ... | | 350.0 | 16.8 | 377.0* | 7.7 |
| 2.3.4 உள்ளூராட்சி மன்றங்கள் ... | | 502.1 | 9.7 | 515.0* | 8.5 |
| 2.3.5 தெரு விளக்கு ... | | 11.8 | 3.5 | 13.0* | 10.2 |

மூலங்கள்: இலங்கை பெற்ருேலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின் சபை.

* தற்காலிகமானவை.

1986 ஏப்பிறல் 1 ஆம் நாளிலிருந்து இலீற்றர் ஒன்றிற்கான உலேயெண்ணெயின் விலே ஒரு ரூபாவினுல் குறைக்கப்பட்டது. வலுவின்மிகையான இறக்குமதிகளே ஊக்குவிப்பதில்லே என்ற தேசிய கொள்கையின் ஒரு பகுதியாக, உள்ளூர் சந்தையில் மற்றைய அனேத்து முதன்மைப் பெற்ருேலிய உற்பத்திகளினதும் விலேகள் ஆண்டுமுழுவதும் மாற்றமின்றியிருந்தன. உள்ளூர்ச்சந்தையில் குறிப்பிட்ட பெற்ருேலிய உற்பத்திகளுக்கான கேள்வி 1986 இல் மேலும் வீழ்ச்சியடைந்து 1984 இலிருந்தும் அவதானிக்கப்பட்ட போக்கினே உறுதிப்படுத்தியது. குறைவடைந்த கேள்விக்கான முக்கியமானதொரு காரணம் 1986 இல் பாரடீசல், உலேயெண்ணெய் என்பனவற்றின் நுகர்வு முன்னேய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறைபே 15 சதவீதத்திலுலும், 9 சதவீதத்திலுலும் வீழ்ச்சியடைந்தமையே யாகும். போக்குவரத்துத்துறை விரிவடைந்தமையின் விளேவாக தன்னியக்க டீசலுக்கான கேள்வி சிறிதளவால் அதிகரித்ததுடன் பெற்ருேலியத்திற்கான கேள்வி 7 சதவீதத்திஞல் அதிகரித்தது. 1986 இல் மண்ணெண்ணெய்க்கான கேள்வி சிறிதளவால் அதிகரித்தது.

### போக்குவரத்து

நாட்டின் சில பகுதிகளில் பாதகமான நிலேமைகள் நிலவிய போதும் 1986 இல் போக்குவரத்துத்துறையில் மிதமான வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இவ்விரிவானது முக்கியமாகப் பயணிகள் மற்றும் சரக்குச்சந்தைகள் இரண்டிலும் தனியார்துறையின் போக்குவரத்து நடவடிக்கை காரணமாக ஏற்பட்டதாகும். வடக்கு, கிழக்கு, வடமத்திய பிரதேசங்களின் சில பகுதிகளில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களினுல் அரசதுறையின் பயணிகள் தொழிற்பாடுகள் பாதிக்கப்பட்டன. புகைவண்டிப்பகுதியின் சிறப்பாக அதன் நீண்டதூரப் பணிகள் மிகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்டன. பிரதேசப் போக்குவரத்துச்சபைகளின் தொழிற்பாடுகள் குறைந்த மட்டத்தில் இருந்தபோதிலும் 150 புதிய வடிவிலான பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டமையினுல் பயணிகள் தரம் உயர்த்தப்பட்டது. அரசதுறையின் இவ்விரு நிறுவனங்களும் மொத்தப் பயணிகள் கிலோமீற்றரில் 50 சதவீதத்திற்குக்கூடிய பங்கினே அளித்துப் பயணிகள் போக்குவரத்துச் சந்தையில் முக்கிய பங்கினே வகிக்கக் கூடியதாகவிருந்தன.

ஆய்விற்குரிய ஆண்டில் பிரதேசப் போக்குவரத்துச்சபைகள் வழமையான பயணிகளுக்கான பேருந்துப்பணிகளின் மட்டத்தினே உயர்த்தக்கூடியதாகவிருந்தன. 1986 ஒகத்து 1 இலிருந்து இலங்கை மத்திய போக்குவரத்துச்சபையின் தொழிற்பாடுகள் சிலவற்றை பிரதேசப் போக்குவரத்துச்சபைக்கு மாற்றியதன் மூலம் இது மேலும் பலப்படுத்தப்பட்டது. இம்மாற்றங்களுடன் இலங்கை மத்திய போக்குவரத்துச்சபை தனது வேலேயாட்களுக்கு இழப்பீட்டு ஓய்வூதியத்தை வழங்கியும் சில வேலேயாட்களேப் பிரதேசப் போக்குவரத்துச்சபைக்கு மாற்றல் செய்தும் தொழிற்படையினேக் குறைத்ததன் மூலம் அதன் உயர்ந்த சுமையினேக் குறைத்துக் கொண்டது.

1986 இன் பயணிகள் கிலோமீற்றரினுல் அளவிடப்பட்ட பயணத்தின் அளவு 151,490 இலட்சமாக அமைந்து 1985 இனேவிட சிறிதளவான ஒருசதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. எனினும் பிரதேசப் போக்குவரத்துச் சபைகள் முந்திய ஆண்டின் மொத்தமான 3,900 இலட்சம் கிலோமீற்றர்களுக்கு எதிராக 3,760 இலட்சம் கிலோமீற்றர்களுக்கு மட்டும் தொழிற்படக்கூடியதாகவிருந்தன. இது பெருமளவிற்கு நாட்டின் சில பகுதிகளில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் காரண

மாகப் பணிகள் பாதகமாகப் பாதிக்கப்பட்டமையினுல் ஏற்பட்டதாகும். இதன் விளைவாக பிரதேசப் போக்குவரத்துச்சபைகள் அவற்றின் திட்டமிடப்பட்ட கிலோமீற்றர் தூரத்தில் வட பிரதேசத்தில் 18 சதவீதத்தையும், கிழக்கு பிர தேசத்தில் 40 சதவீதத்தினையும், வடமத்திய பிரதேசத்தில் 62 சதவீதத்தையும் மட்டும் தொழிற்படுத்தக் கூடியதாகவிருந்தது. இந்நிலைமை பேருந்துகளின் தொகை குறைக்கப்பட்டமையினுல் மேலும் தீவிரமடைந்தது. நடைமுறையி லிருந்த பேருந்துகளில் ஏறக்குறைய 36 சதவீதம் 10 வருடத்திற்குக் கூடியன வாக இருந்தன. இதில் 1,040 பேருந்துகள் 14 வருடத்திற்குக் கூடிய காலத்தைக் கொண்டனவாய் தமது ஆற்றல் காலத்தினைவிடக்கூடிய காலம் பணியாற்றின.

1980 இலிருந்து ஏழாவது ஆண்டாக உலக வங்கியினுல் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் பிரதேச போக்குவரத்துச் சபைகளின் ஊர்தித்தொகுதி முன்னேற்றப்பட்டது. இதன் பயனுகப் பிரதேசப் போக்குவரத்துச் சபைகள் ஆண் டின் கடைசிக் காலாண்டில் தமது பேருந்துத்தொகுதியினை 260 புதிய பேருந்து களினுல் அதிகரிக்கக்கூடியதாக இருந்தது. இவற்றில் 150 புதிய வடிவத்திலும் அமைந்திருந்தன.

பயணிகள் கிலோமீற்றரில் ஏற்பட்ட சிறிதளவான அதிகரிப்புக்கேற்ப பிரதேசப் போக்குவரத்துச்சபைகளும் தமது வருவாய்களை 1986 இல் சிறிதள வால் அதிகரிக்கக்கூடியதாகவிருந்தன. சில பிரதேசங்களில் பணிகள் தடைப்பட்ட போதிலும் அவற்றின் வருவாய்கள் 1985 இன் ரூ. 22,820 இலட்சத்திற்கெதி ராக 1986 இல் மொத்தம் ரூ. 23,320 இலட்சமாக அமைந்து 2.2 சதவீத அதி கரிப்பைக் காட்டியது. பிரதேச போக்குவரத்துச்சபைகளின் மொத்தச் செலவு 1985 இன் ரூ. 23,920 இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 25,820 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. வடக்கு, கிழக்கு, வடமத்திய பிரதேசங்களின் பிரதேசப்போக்கு வரத்துச்சபைகளினுல் குறிப்பிடத்தக்களவு இழப்புக்கள் அதிகரிக்கப்பட்டது. இலங்கை மத்திய போக்குவரத்துச்சபை அதன் நிதி உதவிகளுக்குத் திறைசேரியின் உதவு தொகைகளில் தங்கியிருந்ததுடன் இவை மொத்தத் தொழிற்படும் செலவில் 11 சதவீதத்திற்கு வகைகூறின. இவ் உதவுதொகைகள் மாணவர்களின் பருவ காலச் சீட்டுக்கள் மீதான சலுகைகள், பொலிஸ், தரைப்படையினருக்கான பயண ஆணைச்சீட்டுக்கள், சிக்கனமற்ற பாதைகளில் ஏற்படும் இழப்புக்களுக்கான இழப்பீடுகள் என்பன தொடர்பானவையாகும்.

பயணிகள் போக்குவரத்தில் தனியார்துறையின் பங்கு அரசதுறையின் பங்கினைவிட தொடர்ந்தும் விரைவாக அதிகரித்தது. அதிகரித்த இப் பங்களிப்பு பொதுமக்களுக்கு வழங்கப்படும் பணிகளை முன்னேற்றுவதற்கு உதவியது. தனி யார் பேருந்துத் திணைக்களத்தினுல் தனிப்பட்ட தொழிற்பாட்டாளருக்கு வழங்கப் பட்ட உத்தரவுப்பத்திரங்கள் 1985 இன் 9,864 இலிருந்து 1986 இல் 10,370 ஆக அதிகரித்தது. எனினும் புதிதாக வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரங்கள் 1985 இல் 4,128 இலிருந்து 1986 இல் 3,205 இற்கு வீழ்ச்சியடைந்தது. புதிய உத்தரவுப்பத்திரங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி சில சமயம் யென்னின் பெறுமதி பெரு மளவில் அதிகரித்தமையினுல் தனியார் சொகுசு வண்டிகளின் அலகு ஒன்றுக் கான செலவு உயர்வடைந்தமை காரணமாக ஏற்பட்டிருக்கலாம். இது உந்து ஊர்திப் போக்குவரத்துத் திணைக்களத்தினுல் செய்யப்பட்ட தனியார் சொகுசு வண்டிகளின் புதிய பதிவுகள் 1986 இல் 50 சதவீதத்தினுல் விழ்ச்சியடைந்தமை யில் மேலும் தெளிவாகின்றது.

அதேவேளை தனியார் பேருந்துத் திணைக்களம் குறைவான இயலளவுப் பயன் பாட்டினையுடைய ஊர்திகளைப் பயணிகள் போக்குவரத்துச் சந்தையிலிருந்து குறைப்பதற்கு ஒரு திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. 1986 திசெம்பர் 1 இலிருந்து குறைந்த இயலளவினைக் கொண்ட தனியார் சொகுசு வண்டிகள் அனைத்தும் மாநகரின் பாதைகளில் இருந்தும், கொழும்பு மாநகரின் எல்லைகளை அணுகுவதிலிருந்தும் தடுக்கப்பட்டன. அடுத்த கட்டம் இச்செயற்றிட்டத்தினை முக்கிய நீண்டபாதைகளில் நடைமுறைப்படுத்துவதாக இருக்கும்.

பொருட்கள் போக்குவரத்துத் தொடர்ந்தும் தனியார் வீதிப் போக்குவரத்து பணியாட்களின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்து மொத்த சரக்கு ஏற்றியிறக்கலில் 80 சதவீதத்திற்கும் கூடுதலான பங்குக்கு வகைகூறியது. எனினும் சரக்கு ஊர்திகளின் புதிய பதிவுகள் 1985 இன் 7,216 இல் இருந்து 1986 இல் 3,350 இற்கு 54 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது.

1986 இல் இலங்கை புகைவண்டிப் பகுதியின் நடவடிக்கைகள் வடக்கு, தலைமன்னுர், மட்டக்களப்புப் பாதைகளில் உள்ள பயங்கரவாத நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்டு பயணிகள் கிலோமீற்றர், தொழிற்பட்ட கிலோமீற்றர் ஆகிய, இரண்டிலும் கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்தியது. தொழிற்பட்ட கிலோ மீற்றர் தூரம் 1985 இன் 85 இலட்சத்திலிருந்து 1986 இல் 81 இலட்சத்திற்கு

அட்டவணை 1.21

### போக்குவரத்துத் துறையின் அடிப்படைப் பண்புகள் 1985 – 1986

| விடயம் | அலகு | 1985 | 1984இற்கு மேலாக சதவீத மாற்றம் | 1986 (அ) | 1985 இற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் ... | எண்ணிக்கைகள் | | | | |
| 1.1 இ. ம. போ. சபையின் பேருந்துகள் .. | ,, | 95 | — 70.7 | 254 | 167.4 |
| 1.2 தனியார் சொகுசு வண்டிகள் ... | ,, | 3,557 | — 9.4 | 1,781 | — 49.9 |
| 1.3 தனியார் வாடகை வண்டிகள் ... | ,, | 6,077 | 18.8 | 7,297 | 20.1 |
| 1.4 இரட்டை நோக்கங்களுக்கான வண்டிகள் | ,, | 1,121 | — | 3,892 | 247.1 |
| 1.5 உந்து ஈருருளிகள் ... | ,, | 22,782 | 35.0 | 26,593 | 16.7 |
| 1.6 சரக்குகள் கொண்டு செல்வதற்கான சரக்கு வண்டிகளும் ஏனைய ஊர்திகளும் | ,, | 7,216 | — 12.3 | 3,350 | — 53.6 |
| 2. இ.ம.போ.சபை | | | | | |
| 2.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 390.0 | — 6.4 | 376.0 | — 3.6 |
| 2.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 15,020.0 | — 3.9 | 15,148.6 | 1.0 |
| 2.3 மொத்த வருவாய் ... | ரூ. ப. இ. | 2,281.7 | — 13.9 | 2,332.2 | 2.2 |
| 2.4 மொத்தச் செலவு ... | ரூ. ப. இ. | 2,391.7 | — 18.1 | 2,581.7 | — 7.9 |
| 2.5 மிகை+/குறை— ... | ரூ. ப. இ. | — 110.0 | — 77.8 | —249.5 | 126.8 |
| 3. இலங்கை புகைவண்டிப் பகுதி | | | | | |
| 3.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 8.5 | — | 8.1 | — 4.7 |
| 3.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 2,001.8 | — 12.2 | 1,942.2 | — 3.0 |
| 3.3 சரக்கு தொன் கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 231.9 | — 11.7 | 212.0 | — 8.6 |
| 3.4 மொத்த வருவாய் ... | ரூ. ப. இ. | 464.5 | — 7.7 | 476.0 | 2.5 |
| 3.5 மொத்தச் செலவு ... | ரூ. ப. இ. | 529.9 | — 52.9 | 811.8 | 53.1 |
| 3.6 மிகை+/குறை— ... | ரூ. ப. இ. | — 65.4 | — 89.5 | — 335.8 | 413.4 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: உந்து ஊர்திகள் திணைக்களம்,
இலங்கை போக்குவரத்துச் சபை.
இலங்கை புகைவண்டிப் பகுதி.

5 சதவீதத்தினல் வீழ்ச்சியடைந்தவேளையில் பயணிகள் கிலோமீற்றர் 20,010 இலட்சத்திலிருந்து 19,420 இலட்சத்திற்கு 3 சத வீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. இலங்கைப் புகைவண்டிப்பகுதியினுல் கையாளப்பட்ட சரக்குத்தொன் கிலோ மீற்றர் 1985 இன் 2,320 இலட்சத்திலிருந்து 1986 இல் 2,120 இலட்சத்திற்கு 9 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. இதுபெரும்பாலும் அரசியல் குழப்பம் காரணமாக ஏற்பட்ட தடங்கலினுல் ஏற்பட்டதாகும்.

**வீட்மைப்பு**

அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அடிப்படைத் தேவைகளை முன்னேற்றும் ஒரு வழிமுறையாக இலங்கையின் வீடமைப்புத்தொகையினை விரிவு படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பத்து இலட்சம் வீடுகளை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பித்ததன் மூலம் 1986 இல் தொடர்ந்தும் நடை பெற்றது. 1983 இல் பூர்த்தி செய்யப்பட்ட முந்திய ஒரு இலட்சம் வீடுகள் அமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முற்றுக்கப்படாதிருந்த சில கட்டுமான வேலைகள் 1986 இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. எனினும் முதன் மையான முக்கியத்துவம் இவ்வாண்டில் பத்து இலட்சம் வீடமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கே அளிக்கப்பட்டது.

பத்து இலட்சம் வீடமைக்கும் நிகழ்ச்சித்திட்டம் புகலிடம் வழங்கும் ஒரு தேசியக் கூட்டமைப்பாகும். இதன் நடைமுறைப்படுத்தல் பல்வேறு துணை நிகழ்ச் சித்திட்டங்களைக் கையேற்றுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை, நகர அபிவிருத்திச் சபை, மகாவலி மேலாண்மைச்சபை உள்ளடங்கிய பெருந்தோட்ட முகவர் நிலையங்கள் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபை, இலங்கை அரச பெருந்தோட்டக்கூட்டுத்தாபனம் தனியார்துறைகள் ஏன்பவற்ருல் மேற்கொள்ளப்பட்டது. இவை வேறுபட்ட துணை நிகழ்ச்சித் திட்டங்களைப் பொறுப் பேற்றுள்ளன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, என்பன கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம் போன்ற முக்கிய துணை நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபட்டன. மகாவலி மேலாண்மைச்சபை மகாவலி குடியமர்த்தல் துணை நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்ட வேளையில் பெருந் தோட்ட முகவர் நிலையங்கள், பெருந்தோட்ட வீடமைப்புத்துணை நிகழச்சித்திட் டத்தில் பங்குபற்றுகின்றன. தனியார்துறை துணை நிகழ்ச்சித்திட்டம் (ஒழுங்கற்ற) தனிப்பட்ட குடும்பங்கள் தனியார்துறை (ஒழுங்கான) நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றினூடாக சொத்து அபிவிருத்தியாளர்களினுல் அமுலாக்கப்பட்டது.

முழுப்பொறுப்பும் அரசதுறையிடமே திணிக்கப்பட்டிருந்த முந்திய நிகழ்ச் சித்திட்டங்களிலிருந்து இது அடிப்படையில் வேறுபட்டதாகும். அரசு உதவியை யும் ஊக்கத்தினையும் மட்டும் வழங்கும் அடிப்படையில் முன்னர் எப்போதையும்விட மிகக்கூடிய தொகையினை மிகக் குறைந்த செலவில் அடைவதே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ''பத்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய குடும்பங்களுக்கு'' அவர்களுக்கு வேண்டிய வீட்டு வசதியினை நிருமாணம் அல்லது தரம் உயர்த்தல் அல்லது சிறந்த தங்குமிட வசதிக்கான ஏற்பாடுகளை அளிப்பதற்கெனத் திட்டமிடப்பட்டது. பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தனிப்பட்ட வீடுகட்டுவோருக்கும் சமூகத்திற்கும் காணியும் கடன்களும் வழங்கி, இடர்ப்பாடுகளை நீக்கி, இதில் பங்குபற்றுவோருக் கும் விரிவாக்க வேலையாளர்களுக்கும் பயிற்சியளித்து வசதியும் உதவியும் வழங்கு கின்றது.

கிராமிய வீடமைப்புத்துணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 55,856 குடும்பங்களுக்கு நிதி உதவி அளிப்பதெனத் திட்டமிடப்பட்டது. ஆனால் உண்மையான தொகை 60,337 இனை அடைந்து இலக்கினை விஞ்சியது. 1986 இல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பூர்த்தியாக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1985 இன் 39,876 இற்கெதிராக 38,614 ஆக அமைந்தது. அதேவேளை நிருமாணத்தின் கீழ் உள்ள வீடுகளின் எண்ணிக்கை 1985 இன் 29,322 உடன் ஒப்பிடுகையில் 1986 இல் 51,045 இற்கு அதிகரித்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் செலவு 1985 இன் ரூ. 2,100 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 2.560 இலட்சமாக அமைந்தது.

1985 இல் தொடங்கப்பட்ட நகர வீடமைப்புத்துணை நிகழ்ச்சித்திட்டம் (I) கட்டடத்திற்கான இடத்தினையும் பணிகளையும் முன்னேற்றுவதனையும் (II) சேரிகளையும் சுற்றுப்புறங்களையும் தரமுயர்த்துவதையும் உள்ளடக்கியிருந்தது. இந் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழான வேலை 1986 இல் கணிசமாக முன்னேறியது.

அரசதுறை வீடமைப்பின் மீதான மொத்தச் செலவு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து 1985 இன் ரூ. 5,110 இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 4,790 இலட்சத்தினை அடைந்தது. பெருந்தோட்ட வீடமைப்புத்துணை நிகழ்ச்சித்திட்டம் மீதான அரசின் மூலவளப்பயன்பாடு வீழ்ச்சியடைந்தமைக்கு ஒரு இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் நேரடி முதலீட்டுக்கு வழங்கப்பட்ட குறைந்த முக்கியத்துவமும் பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் குறைந்த செலவு வீடமைப்புக்கும் சுயஉதவி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் கூடிய முக்கியத்துவம் வழங்கப்பட்டமையும் காரணமாகும். ஒரு இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செலவு 1985 இன் ரூ. 2,620 இலட்சத்திலிருந்து 47 சதவீதத்தினால் வீழச்சியடைந்து 1986 இல் ரூ. 1,390 இலட்சமாக விளங்கியது. அதேவேளை பத்துஇலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மீதான செலவு 36 சதவீதத்தினால் அதிகரித்து 1986 இல் ரூ. 3,390 இலட்சத்தினை அடைந்தது. கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செலவில் 22 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டு 1986 இல் ரூ. 2,560 இலட்சத்தினை அடைந்தவேளையில் நகர வீடமைப்புத்துணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செலவு இருமடங்கிற்கு மேலாக அதிகரித்து 1985 இன் ரூ. 390 இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 830 இலட்சத்தினை அடைந்தது.

தற்போது வீடமைப்புத்துறைக்கு நிதியிடுவதில் முற்றாக ஈடுபட்டுள்ள அரசு ஈட்டு முதலீட்டு வங்கியின் நடவடிக்கைகள் இவ்வாண்டில் தொடர்ந்தும் விரிவடைந்தன. இவ்வாண்டில் இதன் கடன் ஒப்புதல்கள் 1985 இன் ரூ. 5,580 இலட்சத்திற்கெதிராக ரூ. 6,840 இலட்சத்தினை அடைந்தன. வங்கியானது அரச ஈட்டு முதலீட்டு வங்கி சொத்து, கைத்தொழில் புத்தாக்க மேலாண்மைச் சபைத்திட்டத்தின் கீழ் கட்டடவாக்கத்திற்கான நிதிகளை வழங்கியது.

1954 இன் எண் 37 கொண்ட தேசிய வீடமைப்புச் சட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்திநிதிக் கூட்டுத்தாபனம் மூன்றாவது ஆண்டாகத் தொடர்ந்து அதன் தொழிற்பாடுகளை நடத்தியது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் அதன் உறுப்பினர்களிடமிருந்து நிதியை பெற்று வீடுகள், தொடர் மாடிகள், ஏனைய கட்டடங்கள் என்பவற்றை நிருமாணிக்கும் நோக்கத்திற்காக அதன் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குகின்றது 1986 இல் கூட்டுத்தாபனம் உதவுதொகைப் பங்குகளை விற்றதன்மூலம் ரூ. 25

அட்டவணை 1.22

## அரசதுறையின் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் — செயற்பாடு 1985 - 1986

| நிகழ்ச்சித் திட்டம் | கட்டி முடிக்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை | | | அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கூறுகளின் எண்ணிக்கை | | செலவு (ரூ. ப. இ.) | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1978-1986 | 1985 | 1986 | 1985 | 1986 | 1978-1986 |
| 1. ஒரு இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | | | | | | | | |
| 1.1 நேரடி கட்டடவாக்கம் ... | 315 | 217 | 12,233 | 690 | 382 | 170.6 | 116.3 | 3,313.1 |
| 1.2 கிராமிய வீடமைப்பு (அ) ... | 2,669 | 1,543 | 31,656 | 2,868 | 1,317 | 89.3 | 23.1 | 805.4 |
| 1.3 தேர்தல் தொகுதி வாரியான வீடமைப்பு (ஆ) ... | 240 | 57 | 10,807 | 120 | 33 | 1.7 | — | — |
| 2. பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | | | | | | | | |
| 2.1 கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் ... | 39,876 | 38,614 | 94,582 | 29,322 | 51,045 | 210.0 | 256.4 | 654.1 |
| 2.2 நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் (இ) ... | 2,314 | 5,269 | 7,583 | 5,270 | 6,856 | 39.3 | 82.7 | 122.1 |
| 3. தேசிய வீடமைப்புக் நிதியக் கடன் ... | — | — | 28,000 | — | — | — | — | 275.0 |
| மொத்தம் ... | 45.414 | 45,700 | 184,861 | 38,270 | 59,633 | 510.9 | 478.5 | 5,169.7 |

மூலங்கள்: தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை, உள்ளூராட்சி வீடமைப்பு கட்டடவாக்க அமைச்சு.

(அ) உதவி வழங்கப்பட்ட சுயஉதவி வீடமைப்பு, மாதிரி கிராமங்கள், கடற்றொழிலாளர்களின் வீடுகள் உட்பட

(ஆ) உதவப்பட்ட சுயஉதவி அடிப்படையில் புதுப்பிக்கப்பட்டது.

(இ) நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் 1985இல் பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.

இலட்சத்தினைப்பெற்றது. இது 1985 இல் பெறப்பட்ட ரூ. 263 இலட்சத்துடன் ஒப்பிடத்தக்கது. மொத்தமாக 646 வைப்புக்கணக்குகள் இவ்வாண்டில் திறக்கப் பட்டு ரூ. 220 இலட்சங்கொண்ட தொகை வைப்பிலிடப்பட்டது. வைப்புக்களுக் குப் பொருத்தமான வட்டி வீதம் 9 சதவீதமாகவும் வீடமைப்புக்காக அதன் உறுப் பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தத்தொகை 1985 இன் 264 கடன்கள் மீதான ரூ. 340 இலட்சத்திற்கெதிராக 572 கடன்கள்மீது ரூ. 740 இலட்சமாக வும் விளங்கியது. 1986 இல் கடன்கள் மீதான வட்டிவீதம் ஆண்டுக்கு 7.5 சத வீதத்திற்கும் 22 சதவீதத்திற்குமிடையே வேறுபட்டமைந்தது.

தனியார்துறையின் வீடமைப்பு நிருமாணம்பற்றிய நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் அரிதாக இருந்தபோதிலும் பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தனியார்துறையிலும் பரந்திருந்தது. தனியார் துறைக்கு வர்த் தக வங்கிகள், நீண்டகாலக் கொடுகடன் நிறுவனங்கள், என்பனவற்றினால் வழங் கப்பட்ட நிதி வசதிகளுடன் தனியார்துறையில் கட்டடநடவடிக்கைக்கான இன் னுமோர் பதிலுரிமையாக கொழும்பு மாநகர சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டடவாக்க விண்ணப்பங் களின் எண்ணிக்கை விளங்கியது. இத்தகைய விண்ணப் பங்கள் 1986 இல் 36 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்தமான 1,024 கட்டட ஒப்புதல்களில் 823 வதிவிட வீடுகள், தொடர்மாடிகள் என்பனவற்றின் கட்டடவாக்கத்திற்கான தாகவோ அல்லது மேலதிக சேர்ப்புகள் திருத்தங்களுக் கானதாகவோ இருந்தன.

அட்டவணை 1.23

கொழும்பு மாநகர சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டட வரைபடங்கள்*
1985-1986

| விடயம் | | 1985 | 1984 ற்கு மேலாக சதவீத மாற்றம் | 1986 | 1985 ற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. புதிய வதிவிடக் கட்டடங்கள் | ... | 521 | — 6.8 | 402 | — 22.8 |
| 1.1 வீடுகள் | ... | 332 | — 8.3 | 224 | — 32.5 |
| 1.2 தொடர் மாடிகள் | ... | 189 | — 4.1 | 178 | — 5.8 |
| 2. வர்த்தகக் கட்டடங்கள் | ... | 41 | — | 83 | 102.4 |
| 3. கைத்தொழில் கட்டடங்கள் | ... | 2 | — | 11 | 450.0 |
| 4. பள்ளிக்கூட கட்டடங்கள் | ... | 2 | — | 1 | — 50.0 |
| 5. இணைப்புக்களும் திருத்தங்களும் | ... | 129 | —27.9 | 421 | 226.3 |
| 6. ஏனைய கட்டடங்கள் | ... | 59 | 25.5 | 105 | 78.0 |
| மொத்தம் | ... | 754 | — 4.0 | 1,024 | 36.0 |

மூலம்: கொழும்பு மாநகர சபை

* அரசு கூட்டுத்தாபனக் கட்டட வரைபடங்கள் நீங்கலாக

**நகர அபிவிருத்தி**

நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை இவ்வாண்டில் அதன் அபிவிருத்தி மீள் நன்னிலைப்படுத்தல் வேலைகளை முன்னேற்றுவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் பல முயற்சிகளை எடுத்தது. மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்றிட்டங்களாக நாடாளுமன்றக் கட்டடத்தொகுதி, உருகொடவத்தை உணவுக்களஞ்சியத்தொகுதி, லிபேர்ட்டிப்பிளாசா, மேல் நீதிமன்றத்தொகுதி, சேரிகளையும் சுற்றுப்புறங்களையும் தரமுயர்த்தும் திட்டம், கொழும்பு வீதியை மீள்நன்னிலைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம், பம்பலப்பிட்டி புகையிரதநிலையவீதி, இரத்தினபுரி செயலகம், வைபவரீதியாக நாடாளுமன்றத்தினைச் சென்றடையும் பாதை என்பவற்றுடன் தொடர்புடைய அபிவிருத்திவேலைகள் என்பன விளங்கின. நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் செலவு 1985 இன் ரூ. 3,170 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 5,290 இலட்சமாக விளங்கியது.

நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை அதற்கு ஒதுக்கப்பட்ட நிதிகளில் ஏறக்குறைய 75 சதவீதத்தினை வாடிக்கையாளரின் பேரில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் மீது செலவிட்டது. இது பம்பலப்பிட்டி புகையிரத நிலையவீதி, லிபேர்ட்டிபிளாசா, மேல் நீதிமன்றத் தொகுதி என்பவற்றுடன் தொடர்புடைய வேலைகளையும் உள்ளடக்கும். இரத்தினபுரிச் செயலகமும், நீதிமன்றத் தொகுதியும் இவ்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்டன. அலுவலகங்கள் விடுதிகள், கடைத்தொகுதிகள், வங்கித்தொழில், கைத்தொழில் தொகுதிகள் போன்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக இதுவரை குறைப்பயன்பாட்டிற்குட்பட்டிருந்த அல்லது பாவிக்கப்படாதிருந்த வர்த்தகரீதியில் பயன்தரத்தக்க நிலங்களைக் கொள்வனவு செய்வதற்காக காணி வங்கி அதன் ஒதுக்கில் ரூ. 730 இலட்சத்தினைப் பயன்படுத்தியது. பேலியகொட ஒன்றிணைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் ரூ. 280 இலட்சம் செலவிடப்பட்டது. பொரளையிலும் ஏனைய இடங்களிலும் உள்ள வர்த்தக கட்டடத்தொகுதிகளுடன் தொடர்புடைய வேலைகள் 1986 இல் ரூ. 130 இலட்சத்தினை ஈர்த்தன.

கட்டட அமைப்பிடம், பணிகள் அபிவிருத்தி, சேரிகளையும் சுற்றுப்புறங்களையும் தரமுயர்த்துவதனையும் உள்ளடக்கிய நகர வீடமைப்புத்துணை நிகழ்ச்சித்திட்டம் இவ்வாண்டிலும் தொடர்ந்தும் இடம்பெற்றது. இவ்விரு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழும் 1986 இல் அதன் மொத்த ஒதுக்கான ரூ. 1,620 இலட்சத்தில் ரூ. 830 இலட்சம் செலவிடப்பட்டது. 1986 இல் 5,269 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டவேளையில் 6,856 வீடுகள் கட்டுமானத்தின்கீழ் இருந்தன. இவ்வாண்டில் 10,340 குடும்பங்களுக்கு நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் வீடமைப்புக்கடன்கள் வழங்கப்பட்டன. இதில் 6,300 குடும்பங்கள் கட்டட, பணிகள் செயற்றிட்டத்தின் கீழும் நன்மையடைந்தன.

**வீதிகளும் புகைவண்டிப் பாதைகளும்**

நெடுஞ்சாலைகள் அமைச்சினுல் பேணப்படும் வீதி அமைப்பின் அளவு 1986 இல் 25,476 கிலோமீற்றர்களாக விளங்கி ஏறக்குறைய முந்திய ஆண்டின் அதே மட்டத்தில் விளங்கியது. எனினும் உள்ளூராட்சி மன்றங்களினுல் பேணப்பட்ட வீதி அமைப்பு 14 சதவீதத்தினுல் அதிகரித்து 1985 இன் 43,455 கிலோமீற்றர்களிலிருந்து 1986 இல் 49,412 கிலோமீற்றர்களுக்கு உயர்ந்தது. வீதிப்பாலங்களின் எண்ணிக்கையும் 5,284 ஆக அமைந்து 1985 இன் அதே மட்டத்தில்

விளங்கியது. எனினும் செயல்முறையில் உள்ள கட்டுமான வேலைகளில் நெடுஞ் சாலைகள் அமைச்சினல் ரூ. 2,140 இலட்சம் செலவிடப்பட்டது. இத்துடன் காலத்திற்குக் காலமும் ஒழுங்காகவும் ஏற்படும் பேணல்செலவு 1986 இல் ரூ. 6,480 இலட்சமாக அமைந்தது. இது ரூ. 3,080 இலட்சங்கொண்ட 1985 இன் செலவுடன் ஒப்பிடுகையில் இருமடங்கு அதிகமானதாகும். 1986 இல் செலவிடப் பட்ட தொகையில் காலத்திற்குக்காலம் பேணும் செலவு ரூ. 4,960 இலட்சத் திற்கு வகை கூறியது. இது 1985 இல் செலவிடப்பட்ட ரூ.1 .390 இலட்சத் துடன் ஒப்பிடத்தக்கது.

உலக வங்கியினுலும் ஆசிய அபிவிருத்தி வங்கியினுலும் நிதியிடப்படும் ஐந் தாண்டு வீதிப்பேணலும் மீள் நன்னிலைப்படுத்தலும் செயற்றிட்டம் நெடுஞ்சாலை களின் பேணல், திட்டமிடல், தொழிற்பாடுகள் என்பவற்றுக்குப் பொறுப்பான நிறுவனரீதியான அமைப்பினை மீள அமைப்பதில் முடிவுற்றது. 1986 சனவரி 1இல் இருந்து வீதி அபிவிருத்தி மேலாண்மைச்சபை இலங்கையின் வீதியமைப்பின் கட்டுமானம், பேணல் என்பனவற்றின் பொறுப்பினைக் கையேற்றது.

1984 இல் ஆரம்பிக்கப்பட்ட ஐந்தாண்டு வீதிப்பேணலும் மீள் நன்னிலைப் படுத்தலும் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிச்செலவில் ஒருபகுதியினைப் பூர்த்திசெய் வதற்கு நெடுஞ்சாலைகள் அமைச்சு உலக வங்கியிலிருந்து ரூ. 11,300 இலட்சத் தினையும் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ரூ. 6,000 இலட்சத்தினையும் கொண்ட கடன்களையும் யப்பானிய அரசிடமிருந்து பொறிகளுக்காக ரூ. 720 இலட்சம் (4,320 இலட்சம் யென்) கொண்ட நன்கொடையையும் பெற்றது.

அதேவேளை அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 1986 இல் வீதி மீள்நன்னிலைப் படுத்தலுக்கும் பேணலுக்கும் ரூ. 6,630 இலட்சத்தினைச் செலவிட்டது. இதில் ரூ. 1,360 இலட்சம் வெளிநாட்டு உதவி மூலம் பெறப்படுமென எதிர்பார்க்கப் படுகின்றது. போக்குவரத்தினை இணைத்து திட்டமிடுவதற்கான அமைச்சுக்களுக் கிடையேயான குழுதொடர்ந்தும் உலக வங்கியினல் நிதியிடப்பட்ட நடைமுறை யில் உள்ள போக்கு வரத்துத்திட்டமிடல் ஆய்வினை ஒன்றுபடுத்தும் அமைப்பாகச் செயலாற்றியது. இவ்வாய்வின் முக்கிய அம்சம் முறையான வீதிப்பேணலுக்கும் மீள்நன்னிலைப்படுத்தலுக்குமான நிகழ்ச்சித்திட்டங்களை இயலக்கூடிய, பலன் மிக்க வகையில் செயல்படுத்துவதாகும்.

1986 இல் நடைமுறையிலிருந்த 1,944 கிலோமீற்றர் கொண்ட புகையிர தப்பாதைகளின் அமைப்பில் புதிய சேர்க்கைகள் எதுவும் ஏற்படவில்லை. அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 1986 இல் புகைவண்டிப்பாதைகளின் மீள் நன்னிலைப்படுத்தலுக்காக ரூ. 2,600 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இதில் ரூ. 1,700 இலட்சம் வெளிநாட்டு உதவியிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது.

## தொலைத்தொடர்பூட்டல்

*1986* இல் நாட்டின் தொலைத்தொடர்பூட்டல் பணிகளை முன்னேற்றுவதற்குப் பல செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. பெருந்தொகையான மாவட்டங்களில் முக்கிய ஆளி நிலையங்களைத் தரமுயர்த்துவதன்மூலம் புதிய பிரதேசங்களுக்கு வாடிக்கையாளர் நேரடித் தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டன. சமாந்தர அமைப்பினை அதிக இயலளவு கொண்ட புதிய எண் முறையான தொலைபேசிகளுக்கு மாற்றியதன்மூலம் வேறுபட்ட ஆளிநிலையங்களுக்கிடையே தொலைத்தொடர்பு அமைப்பு முன்னேற்றப்பட்டது. இத்துடன் தென்கிழக்கு ஆசிய-மத்திய கிழக்கு—மேற்கு ஐரோப்பிய கடலுக்குக் கீழான கம்பிச் செயற்றிட்டம் ஆரம்பித்ததுடன் பன்னாட்டுத் தொலைத்தொடர்புப் பணிகளும் விரிவடைந்த தொலைதொடர்புப் பணிகளை முன்னேற்றுவதற்காக *1981* இல் தயாரிக்கப்பட்ட முதன்மைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலும் இவ்வாண்டில் பெரும்பாலும் பூர்த்தியாக்கப்பட்டது. இத்துடன் நடைமுறையிலுள்ள பொதுவான ஏற்றத்தாழ்வுகளை முற்றாக நீக்குவதற்கும் தொலைத்தொடர்புப்பணிகளின் நாடு பூராவுமான கேள்வியினை ஈடுசெய்வதற்கும் வெளிநாட்டுத் தொழில்நுட்ப, நிதி உதவியுடன் தொலை தொடர்புத் திணைக்களம் ஒரு முக்கிய துணை திட்டத்தினையும் வரைந்துள்ளது.

பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் உதவியைப் பெறும் செயற்றிட்டத்தின் கீழும் குறுங்கால அபிவிருத்தி எடுத்துரைப்புக்களின் கீழும் வாடிக்கையாளர் நேரடிச் சுழற்சி வசதிகள் சில குறிப்பிட்ட ஆழி நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. அவையாவன கொஸ்கம, ஹன்வல, மாறவில, லுணுவில, கொட்டியகும்புற, வறக்காப்பொல, கல்கமுவ, குளியாப்பிட்டி, மாகோ, நாரம்மல, பொல்காவல, மத்துகம, பிபிலை, மொனறாகலை, பசறை, வெல்லவாய, ரத்தோட்டை, றம்பொட, உடப்புசலாவ, எல்பிட்டிய, நாகொட, ஹினிதும, நொச்சியாகம மதவாச்சி என்பனவாகும். அத்துடன் புதிய எண் முறையான தொலைபேசிகளை அறிமுகம் செய்ததன்மூலம் பல்வேறு ஆழி நிலையங்களுக்கிடையே தொலைத்தொடர்புப் பணிகள் முன்னேற்றப்பட்டன. முன்னேற்றப்பட்ட சில தொடர்புகள் கொழும்பு அவிசாவலை, களுத்துறையும் காலியும், மாத்தளை--றத்தோட்டை, கண்டியும் இரத்தினபுரியும், இரத்தினபுரி-பலாங்கொடயும், கொலன்ன, மொனறாகலை--மதுல்சிம-பிபிலை, நுவரெலியா-மதுல்சிம, றம்பொடயும் மஸ்கெலியாவும் ஆகிய இடங்களுக்கிடையே ஏற்பட்டன.

*1986* யூலையில் ஆரம்பிக்கப்பட்ட தென் கிழக்கு ஆசியா - மத்திய கிழக்கு மேற்கு ஐரோப்பா இடையே கடலுக்குக்கீழ் கம்பியமைக்கும் செயற்றிடத்தின்கீழ் *190* இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டமையினால் ஆய்வுக்குரிய ஆண்டில் இலங்கைக்குக் கிழக்கேயும் மேற்கேயும் உள்ள நாடுகளுக்கான பன்னாட்டு இணைப்புக்கள் விரிவுபடுத்தப்பட்டன.

பின்லாந்து அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட அம்பாந்தோட்டை செயற்றிட்டம் தங்காலை, அம்பாந்தோட்டை ஆகியவற்றைச்சுற்றியுள்ள பின் தங்கிய பிரதேசங்களுக்கு நேரடி சுழற்சி வசதியை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் பின்லாந்து அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்படும் இன்னுமொரு செயற்றிட்டம் இங்கிரிய, கோவின்ன, ஹொரன ஆகிய இடங்களுக்கு அடுத்த இரு ஆண்டுகளில் நேரடிச் சுழற்சி வசதியை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டம்**

விக்டோரியா, கொத்மலே, மாதுருஓயா, இரந்தெனிகல, இரந்தம்பே போன்ற முதன்மைச் செயற்றிட்டங்கள், இவற்றுடன் தொடர்பான கீழ் நீரோட்டப் பொறியியல் வேலைகளும் நீர்ப்பாசன வேலைகளும், குடியேற்றமும் வேளாண்மை உற்பத்தியும் ஆகியவற்றை உள்ளடக்கும் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டமே இலங்கையில் மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய வலு, நீர்ப்பாசன, வேளாண்மை அபிவிருத்தி, குடியேற்றச் செயற்றிட்டமாகும். இச் சூறுகளின் முக்கிய வேலைகள் பல ஏற்கனவே முடிக்கப்பட்டு எஞ்சிய வேலைகள் 1986 இல் நடைபெற்றுவந்தன. 1986 இறுதிவரை இச்செயற்றிட்டத்திற்கான மொத்தச் செலவுகள் ரூ. 382,700 இலட்சமாகும். இதில் ரூ. 44,260 இலட்சம் அல்லது 12 சதவீதம் 1986 இல் செலவிடப்பட்டது. விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டம் 1992 ஆம் ஆண்டில் முற்றாக முடிவுறும் என எதிர்பார்க்கப்படுவதோடு இறுதிச்செலவு ஏறத்தாழ ரூ. 500,000 இலட்சமாகுமெனவும் மதிப்பிடப்படுகின்றது.

1986 இன் இறுதியளவில் விக்டோரியா செயற்றிட்டத்தின் மீதான மொத்த மூலதனச் செலவினம் ரூ. 79,720 இலட்சமாக அமைந்தது. வேலையின் பெரும்பங்கு ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளதால் இதில் ரூ. 6,450 இலட்சம் அல்லது 8 சதவீதம் மட்டுமே இவ்வாண்டில் செலவிடப்பட்டது. 1985 ஏப்பிறலில் அது தொழிற்படத் தொடங்கிய பின்பு இத்திட்டம் முறை 'பி' இலும் 'சி' இலும் கீழ்நீரோட்ட நீர்ப்பாசனத்திற்காக 11,660 இலட்சம் கன மீற்றர் நீரை விடுவித்தது. இக்காலத்தில் உருவாக்கப்பட்ட வலு 1,502 கிகாவாட் மணித்தியால சக்தி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது அதன் ஒப்பீட்டு ரீதியான இயலளவான ஆண்டுக்கு 600 கிகாவாட் மணித்தியால உறுதியான சக்தியுடனும் 200 கிகாவாட் மணித்தியால இரண்டாந்தர சக்தியுடனும் ஒப்பிடப்படுகின்றது விக்டோரியா சுற்றுப்புற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இப்பகுதியின் உள்ளமைப்பு வசதிகளின் கட்டுமானவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இது நீர் வழங்கல் திட்டங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட கழிவு நீர் அகற்றும் முறைகள், அஞ்சல் தொலைத்தொடர்பு வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

1986 இறுதியில் கொத்மலே செயற்றிட்டத்தின் மீதான மொத்தச் செலவு ரூ. 87,060 இலட்சமாகும். செயற்றிட்டத்தின் பெரும்பங்கு முன்பே முடிக்கப்பட்டமையால் அதில் ரூ. 5,430 இலட்சம் அல்லது 6 சதவீதம் மாத்திரமே இவ்வாண்டில் செலவு செய்யப்பட்டது. 1985 ஓகத்தில் இது தொழில் படத் தொடங்கியதிலிருந்து இச்செயற்றிட்டம் 198 கிகாவாட் மணித்தியால சக்தியை உருவாக்கியது. எனினும், சுரங்கவழியில் எதிர்பாரா கசிவு ஏற்பட்டமையின் விளைவாக வலு உற்பத்தியாக்கம் தற்காலிகமாக தடைசெய்யப்படவேண்டி ஏற்பட்டதுடன் சுரங்கக் கசிவை மீளமைத்தல் மேலும் ரூ. 5,000 இலட்சம் செலவை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கொத்மலே சுற்றுப்புற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொத்மலே புதிய நகரத்தின் நீர் வழங்கல் திட்டம் முடிவடையும் தறுவாயில் இருந்தது. தொருகலே, நாயப்பன பாடசாலை கட்டிடங்கள் கட்டப்பட்டு வந்ததுடன் புதிய குடியேற்றத்திட்டப்பகுதியில் மின் வலு வழங்கல்களின் அமைப்பும் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

## அட்டவணை 1.24

### விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டம் - செலவு மதிப்பீடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| செயற்றிட்டம் | 1986 இற்கான வரவு செலவுத்திட்ட செலவினம் | | | 1986க்கான உண்மைச் செலவினம் (அ) | 1986 இறுதி வரையான ஒன்று சேர்ந்த செலவினம் (அ) |
|---|---|---|---|---|---|
| | ஒதுக்குகள் | துணை ஒதுக்குகள் | மொத்தம் | | |
| 1. விக்டோரியா நீர்த்தேக்கம் ... | 74.0 | — | 74.0 | 644.9 | 7,972.1 |
| 2. கொத்மலை நீர்த்தேக்கம் ... | 57.0 | — | 57.0 | 542.6 | 8,706.0 |
| 3. இரந்தெனிகலை நீர்த்தேக்கம் ... | 945.0 | — | 945.0 | 1,184.0 | 5,160.5 |
| 4. மாதுறுஓயாவும் கால்வாயும் ... | — | — | — | — | 2,640.1 |
| 5. மினிப்பே அணைக்கட்டு மாற்று வடிகால் கால்வாய் ... | 5.0 | — | 5.0 | 2.2 | 1,236.7 |
| 6. நீர்ப்பாசனமுறை 'பி' ... | 1,083.0 | — | 1,083.0 | 807.0 | 4,892.0 |
| 7. நீர்ப்பாசனமுறை 'சி' ... | 721.0 | — | 721.0 | 647.5 | 3,262.8 |
| 8. நிலை I ... | — | — | — | — | 526.8 |
| 9. நிலை II ... | — | — | — | 34.8 | 2,307.6 |
| 10. ஏனையவைகள் ... | 565.0 | — | 565.0 | 562.6 | 1,565.7 |
| மொத்தம் ... | 3,450.0 | — | 3,450.0 | 4,425.6 | 38,270.3 |

மூலம்: இலங்கை மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபை

(அ) தற்காலிகமானவை.

1983 யூலையில் தொழிற்படத்தொடங்கிய மாதுறு ஓயா செயற்றிட்டத்தின் மீது 1985 இறுதிவரை செலவு செய்யப்பட்ட மொத்தத்தொகை ரூ. 26,400 இலட்சமாக விளங்கியது. 1986 இல் இச்செயற்றிட்டத்தின்மீது மேலதிகச் செலவுகள் எதுவும் செய்யப்படவில்லை. இச்செயற்றிட்டம் ஏறத்தாழ 46,750 எக்டேயர்கள் புதிய காணிகளுக்கும் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் முறை 'பி' இலுள்ள ஏற்கனவே பயிர் செய்யப்பட்ட 3,750 எக்டேயர்களுக்கும் நீர்ப்பாசன வசதிகளை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இச் செயற்றிட்டத்தில் 7.2 மெகாவாட் வலுவை உற்பத்தி செய்வதற்கு இரு வலு நிலையங்களை அமைப்பதற்காக வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

1986 இறுதிவரை இரந்தெனிகல நீர்த்தேக்கச் செயற்திட்டத்தின் மீதான மொத்தச் செலவு ரூ. 51,610 இலட்சமாக விளங்கி இதில் ரூ. 11,840 இலட்சம் அல்லது 23 சதவீதம் 1986 இல் செலவிடப்பட்டது. இரந்தெனிகல நீர்த்தேக்கத்தில் நீரைத்தேக்கிவைத்தல் 1986 மாச்சில் தொடக்கப்பட்டது. வலு நிலையத்தினதும் ஆளி அமைப்பினதும் மீதான வேலைகள் நிறைவு செய்யப்பட்டது. தொழிற்பாட்டிலுள்ள இரண்டு உற்பத்திப்பிரிவுகள் இவ்வாண்டில் 174 கிகாவாட் மணித்தியாலங்கள் வலுவினை உற்பத்தி செய்தன. இது ஆண்டுக்கான அளவிடப்பட்ட இயலளவான 420 கிகாவாட் மணித்தியாலங்கள் உறுதியான சக்தியுடனும் 200 கிகாவாட் மணித்தியாலங்கள் இரண்டாந்தரச் சக்தியுடனும் ஒப்பிடத்தக்கது.

இவ்வாண்டில் ஏனைய செலவு விடயங்களில், நீர்ப்பாசனமுறை 'பி' இன் மீது ரூ. 8,070 இலட்சம் செலவிடப்பட்டதும் நீர்ப்பாசனமுறை 'சி' இன்மீது ரூ. 6,480 இலட்சம் செலவுசெய்யப்பட்டதும் அடங்கும் .1986இறுதிவரை இவ்விரு முறைகள் மீதான ஒன்றுதிரட்டிய செலவு முறையே ரூ. 48,920 இலட்சமாகவும், ரூ. 32,630 இலட்சமாகவும் விளங்கின.

தற்காலிகத்தரவுகளின்படி 1985/86 பெரும்போகத்தில் ஏறத்தாழ 155,000 எக்டேயர்கள் புதிய காணிகளை உள்ளடக்கும் மகாவலி ஆளுமைப்பகுதியில் பயிரிடப்பட்ட மொத்தப் பரப்பளவு 40,822 எக்டேயர்களாகும். இது முன்னைய ஆண்டின் இதே காலப் பகுதியினை விட 11 சதவீதங்கொண்ட அதிகரிப்பாகும். 1986 பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவின் அதிகரிப்புக்கு பெரும்பாலும் முறைகள் 'பி' இலும் 'சி' இலும் மேலதிக நிலங்களைப் பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டுவர உதவிய நீர்ப்பாசனத் தண்ணீர் அதிகளவு கிடைத்தமை காரணமாகும். 1986 சிறு போகத்தில் பயிரிடப்பட்டமொத்த நிலப்பரப்பு 35,231 எக்டேயர்களாக 27 சதவீதத்தால் உயர்வடைந்தது. இதுவும் பெரும்பாலும் பயிர்ச்செய்கையின்கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பளவு குறிப்பாக முறைகள் 'பி', 'சி', 'எச்' இல் அதிகரித்தமை காரணமாக ஏற்பட்டதாகும்.

இரு பருவகாலங்களிலும் பயிரிடப்பட்ட பரப்பளவில் 79 சதவீதத்திற்கு நெல் வகைகூறியது. எனினும் இவ்வாண்டில் ஏனைய உணவுப்பயிர்களின் செய்கையின் கீழுள்ள பரப்பளவிலும் சிறு அதிகரிப்புக்காணப்பட்டது. பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவில் நெற்செய்கை ஏறத்தாழ 94 சதவீதத்திற்கு வகைகூறியவேளையில் சிறுபோகத்தில் அதன் ஒத்த பங்கு 61 சதவீதமாக வீழ்ச்சியுற்று இக்காலப்பகுதியில் நீர் வழங்கல் குறைந்தளவில் காணப்பட்டபோது ஏனைய உணவு, காசுப்பயிர்களின் செய்கைக்கு ஏற்பட்டவிருப்பத்தைக்காட்டியது. 1986 இல் அதிகளவு புதிய பரப்பளவுகள் பயிர்ச்செய்கையின்கீழ் கொண்டுவரப்பட்டன. முறை 'சி' இல் நெல் பயிர்ச்செய்கையின் கீழுள்ள பரப்பளவு 44 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் முறை 'பி' இன் கீழுள்ளது 58 சதவீதத்தால் அதிகரித்தது. முறை 'ஜீ' இன் கீழுள்ள நெல் செய்கைப்பரப்பளவு 11 சதவீதத்தால் அதிகரித்தது.

மகாவலி 'எச்' பகுதியில் நெல் உற்பத்தி 8 சதவீதத்தால் 115,500 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்ததுடன் இது 1986 இன் மொத்த நெல் உற்பத்தியில் ஏறத்தாழ 4 சதவீதமாகவிளங்கியது. இது பெருமளவிற்கு விதைக்கப்பட்ட பரப்பின் வீழ்ச்சியினதும் விளைச்சல் காலப் பகுதியின் பிற்பகுதியில் காணப்பட்ட வரண்ட காலநிலைமை காரணமாக சராசரி விளைச்சல் குறைந்தமையினதும் காரணமாக ஏற்பட்டது. 'எச்' பரப்பில் துணை உணவுப்பயிர்களின் கீழுள்ள பரப்பளவு 46 சதவீதத்தால் 13,091 எக்டேயர்களுக்கு உயர்வடைந்தது. மிளகாய், வெங்காயம் ஆகியவற்றின்கீழ் கொண்டு வரப்பட்ட அதிக பரப்பளவு குறிப்பாக கலாவேவ பகுதியில் இவ்வதிகரிப்புக்கு வகைகூறியது. முறை 'ஜீ' இல் துணை உணவுப்பயிர்களின் கீழுள்ள பரப்பளவும் ஏறத்தாழ 20 சதவீதத்தால் 1,470 எக்டேயர்களுக்கு உயர்வடைந்தது.

1986 இறுதிவரை முறை 'எச்' இல் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 28,666 ஆகும். முறை 'சி' இல் 1986 இறுதிவரை 12,422 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. இதேவேளை முறை 'பி' இலும் முறை 'ஜீ' இலும் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை முறையே 9,921 ஆகவும் 3,295 ஆகவும் விளங்கின.

அட்டவணை 1.25

**மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிதாக பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு**

எக்டேயர்கள்

| விடயம் | பெரும் போகம் 1982/83 | சிறு போகம் 1983 | மொத்தம் 1983 | பெரும் போகம் 1983/84 | சிறு போகம் 1984 | மொத்தம் 1984 | பெரும் போகம் 1984/85 | சிறு போகம் 1985 | மொத்தம் 1985 | பெரும் போகம் 1985/86 (அ) | சிறு போகம் 1986(அ) | மொத்தம் 1986(அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிரிவு 'எச்' ... | 25,261 | 6,546 | 31,807 | 23,620 | 19,990 | 43,610 | 23,309 | 18,319 | 41,628 | 24,298 | 21,078 | 45,376 |
| நெல் ... | 22,400 | 3,917 | 26,317 | 22,514 | 14,292 | 36,806 | 22,957 | 9,709 | 32,666 | 23,449 | 8,836 | 32,285 |
| ஏனைய பயிர்கள் ... | 2,861 | 2,625 | 5,490 | 1,106 | 5,698 | 6,084 | 352 | 8,610 | 8,962 | 849 | 12,242 | 13,091 |
| பிரிவு 'பி' ... | 2,682 | 1,400 | 4,082 | 1,749 | 1,438 | 3,187 | 2,535 | 2,246 | 4,781 | 3,851 | 3,554 | 7,405 |
| நெல் ... | 2,200 | 1,400 | 3,600 | 1,749 | 1,438 | 3,187 | 2,472 | 2,061 | 4,533 | 3,686 | 3,463 | 7,149 |
| ஏனைய பயிர்கள் ... | 482 | — | 482 | — | — | — | 63 | 185 | 248 | 165 | 91 | 256 |
| பிரிவு 'சி' ... | — | 1,503 | 1,503 | 7,140 | 3,609 | 10,749 | 7,545 | 4,857 | 12,402 | 9,358 | 7,868 | 17,226 |
| நெல் ... | — | 1,503 | 1,503 | 5,352 | 3,609 | 8,961 | 6,086 | 4,827 | 10,913 | 7,945 | 7,782 | 15,727 |
| ஏனைய பயிர்கள் .. | — | — | — | 1,788 | — | 1,788 | 1,459 | 30 | 1,489 | 1,413 | 86 | 1,499 |
| பிரிவு 'ஜி' .. | 3,202 | 1,810 | 5,012 | 2,351 | 2,023 | 4,374 | 3,258 | 2,106 | 5,364 | 3,315 | 2,731 | 6,046 |
| நெல் .. | 2,958 | 1,321 | 4,279 | 1,975 | 1,405 | 3,380 | 2,941 | 1,198 | 4,139 | 3,153 | 1,423 | 4,576 |
| ஏனைய பயிர்கள் .. | 244 | 489 | 733 | 376 | 618 | 994 | 317 | 908 | 1,225 | 162 | 1,308 | 1,470 |
| மொத்தம் ... | 31,145 | 11,259 | 42,404 | 34,860 | 27,060 | 61,920 | 3,6647 | 27,528 | 64,175 | 40,822 | 35,231 | 76,053 |

* தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை.

## நீர்ப்பாசன அபிவிருத்தி

நீர்ப்பாசன அபிவிருத்தி புதிய நீர்ப்பாசன செயற்றிட்டங்களின் கட்டுமானம் ஏற்கனவேயுள்ள நீர்ப்பாசனத்திட்டங்களின் புத்தாக்கமும் முன்னேற்ற முகாமைத்துவமும் சிறு அளவிலான நீர்த்தேக்கங்களினதும் அணைக்கட்டுக்களினதும் மீளமைப்பும் புத்தாக்கமும் ஆகியவற்றில் ஈடுபடுகின்றது. 1986 இல் நீர்ப்பாசனத் திணைக்களம் மகாவலி பகுதிக்கு வெளியே நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்திலுள்ள இங்கினிமிற்றியா நீர்த்தேக்க செயற்றிட்டம் 1985 இல் தொடங்கப்பட்டு 1986 இல் முற்றுகமுடிக்கப்பட்டது. இந் நீர்த்தேகம் ஏறத்தாழ 4,300 எக்டேயர்கள் புதிய நிலத்திற்கும் 4,000 எக்டேயர்கள் ஏற்கனவே பயிர்செய்யப்பட்ட நிலத்திற்கும் நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதற்கு இயலுமானது. இச்செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 3,400 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. மொறவேவ விரிவுபடுத்தலுக்கான நெலுஓயா திசை திருப்பும் திட்டம் பாதுகாப்புக் காரணங்களுக்காக மெதுவாகத் தொடரப்பட்டது. கிரிந்தி ஓயா நீர்ப்பாசன , குடியேற்றறச்செயற்றிட்டத்தின் முன்னேற்றம் ஒப்பந்தக்காரர்கள் முதன்மைக்கால்வாய்களின் கட்டுமான வேலைகளை தாமதப்படுத்தியதனுல் இவ்வாண்டில் ஓரளவுக்கு பாதிப்படைந்தது. பாதகமான காலநிலை காரணமாக திட்டமிடப்பட்டவாறு 1985 இல் முடிக்கப்பட முடியாதுபோன நில்வளகங்கை வெள்ளப் பாதுகாப்புத்திட்டத்தின் நிலை I 1986 இல் முடிக்கப்பட்டது. ஏற்கனவே பயிர்செய்யப்பட்ட ஏறத்தாழ 1,300 எக்டேயர்கள் நிலமும் 700 எக்டேயர்கள் புதிய நிலமும் செயற்றிட்டத்தின் இக்கட்டத்திலிருந்து வெள்ளப் பாதுகாப்பு நிவாரண உதவிகளைப்பெறும். இந்நிலையில் இச்செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 5,250 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. பன்னுட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தினுல் ஓரளவுக்கு நிதியிடப்பட்டதும் 24,300 எக்டேயர்களை உள்ளடக்கியதுமான கல்ஓயா நீர்ப்பாசன முறையின் இடது கரையை புத்தாக்கம் செய்வதனை நோக்கமாகக் கொண்டதுமான கல்ஓயா புத்தாக்க, நீர்முகாமைத்துவச் செயற்றிட்டம் 1985 இறுதியில் முடிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும் பன்னுட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தினுல் வழங்கப்பட்ட நிதி முடிவடைந்த போது செயற்றிட்டத்தின் 85 சதவீதம் மாத்திரமே முடிக்கப்பட்டிருந்தது. எஞ்சியவேலை முக்கியமாக களக் கால்வாய்களின் கட்டுமானவேலைகள் 1986 இல் அரச நிதியுடன் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

இம்முக்கிய செயற்றிட்டங்களைத் தவிர சிறு நீர்பாசன முறைகளின் அபிவிருத்தியிலும் நீர்ப்பாசனத்திணைக்களம் ஈடுபட்டது. பன்னுட்டு அபிவிருத்தி அமைப்பினுல் உயவியளிக்கப்பட்ட கிராமிய நீர்ப்பாசன புத்தாக்க செயற்றிட்டத்தின்கீழ் ஏறத்தாழ 1,200 கிராமிய நீர்த்தேக்கங்களும், அணைக்கட்டுக்களும் நவீனமயப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாண்டில் 171 செயற்றிட்டங்கள் முடிக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை அனுராதபுரம், பதுளை மாவட்டங்களில் காணப்பட்டன. இச்செயற்றிட்டங்களின்மீதான மொத்தச் செலவு ஏறத்தாழ ரூ. 7,060 இலட்சமாக மதிப்பிடப்பட்டதுடன் இதில் ரூ. 1,310 இலட்சம் வெளிநாட்டு உதவிகளிலிருந்து கிடைத்தது. இவ்வாண்டில் ஏறத்தாழ 5,179 எக்டேயர் நிலம் இம்முன்னேற்றங்களிலிருந்து பயனடையுமென எதிர்பார்க்கப்பட்டது.

இதேவேளை ஒருங்கிணைக்கப்பட்ட செயற்திட்டங்களில் 139 வேலைகள் முடிக்கப்பட்டன. இதில் பெரும்பாலானவை குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டில் அநுராதபுரம் உலர்வலய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் ஒரு செயற்றிட்டம் முடிக்கப்பட்டதுடன் இது வேளாண்மை அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சின் மூலம் நிதியுதவியளிக்கப்பட்டது. 1986 இல் இச் செயற்றிட்டங்களின்மீது பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு உதவியின் மொத்தத் தொகை ரூ. 2,730 இலட்சமென மதிப்பிடப்பட்டது.

**ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

கிராமிய குடித்தொகையின் தொழில்நிலை, உற்பத்தி வருவாய், பொது வாழ்க்கைத்தரம் ஆகியவற்றினை உயர்த்துவதன் மூலம் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனத்தின்கீழ் கூடியளவு சமநிலையான பிரதேச அபிவிருத்தியினை அடைவதை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. 1985 இல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 12 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 1986 இல் கேகாலை மாவட்டத்தையும் உள்ளடக்குமாறு விரிவாக்கப்பட்டது.

கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியுதவியளிக்கப்பட்டது. ஏழு ஆண்டுகளுக்கு செயற்படுத்தப்பட வேண்டிய இச்செயற்றிட்டத்தின் மொத்தச்செலவு ரூ. 4,090 இலட்சமாக மதிப்பிடப்பட்டதுடன் இதில் ரூ. 2,660 இலட்சம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிகழ்ச்சித்திட்டம் முக்கியமாக கிராமிய நீர்வழங்கல், சிறு ஏற்றுமதிப்பயிர்கள், நீர்ப்பாசனம், தேயிலை சிறு உடமை, கிராமிய கொடுகடன், கிராமிய வீதி வலை அமைப்பு ஆகியவற்றின் அபிவிருத்தியினை உறுதிப்படுத்துகிறது.

1986 இல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்தச் செலவினம் முன்னைய ஆண்டில் செலவிடப்பட்ட ரூ. 4,040 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 3,970 இலட்சத்திற்கு வகைகூறிற்று. 1986 இறுதிவரை எல்லா செயற்றிட்டங்களின் மீதான திரட்டிய செலவினம் அட்டவணை 1.26 இல் தரப்பட்டுள்ளது.

1986 இல் பொதுவாக சில மாவட்டங்களிலுள்ள செயற்றிட்டங்களைத் தவிர ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்டங்கள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டன. வடக்கு கிழக்கு பிராந்தியங்களில் உள்ளூர் குழப்பங்கள் காரணமாக உலக வங்கியால் நிதியிடப்பட்ட மன்னார், வவுனியா செயற்றிடங்களின் செயற்படுத்தல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட வேளையில் நெதர்லாந்து அரசு முல்லைத்தீவு ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட செயற்றிட்டங்களுக்கான மேலதிக கடப்பாடுகளை பாதுகாப்பு நிலைமை சீராகும்வரை கட்டுப்படுத்திக்கொண்டது. கனடிய அரசினால் நிதியிடப்பட்ட மட்டக்களப்பின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட செயற்றிட்டத்தில் முழுமையான செயற்படுத்தல் நிலைமைகள் சீரடையும்வரை தள்ளிப்போடப்பட்டது. உலகவங்கியால் நிதியளிக்கப்பட்ட குருநாகல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்துவதில் பல தாமதங்களின் பின்பு இறுதியாக 1986 திசம்பரில் முடிவடைந்தது. கம்பகா மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான தொடக்கவேலைகள் இவ்வாண்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பன்னாட்டு அபிவிருத்திக்கான பின்லாந்து முகவர் அமைப்புடன் களுத்துறை மாவட்டத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

அட்டவணை 1.26

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மாவட்ட ரீதியான செலவினம் 1985–1986

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மாவட்டம் (அ) | | வெளிநாட்டு உதவி மூலங்கள் | மதிப்பிடப்பட்ட செலவு | | | காலவரைக்கும் ஒன்று சேர்ந்த செலவினம் | | 1985ஆம் ஆண்டின் செலவினம் | 1986ஆம் ஆண்டின் செலவினம் (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வெளிநாட்டு உதவிக் கடப்பாடுகள் | உள்நாடு | மொத்தம் | 1985 முடிவில் உள்ளபடி | 1986 முடிவில் உள்ளபடி (ஆ) | | |
| 1. குருநாகல் | (1979) ... | உலக வங்கி | 430 | 215 | 645 | 595 | 645 | 56 | 50 |
| 2. மாத்தறை | (1979) ... | சீடா (சுவீடன்) | 179 | 20 | 199 | 94 | 119 | 13 | 25 |
| 3. அம்பாந்தோட்டை | (1979) ... | நொராட்( நோர்வே | 590 | 8 | 598 | 256 | 310 | 50 | 54 |
| 4. நுவரெலியா | (1980) ... | நெதர்லாந்து | 410 | 11 | 421 | 139 | 187 | 40 | 48 |
| 5. மாத்தளை | (1981) ... | உலக வங்கி | 293 | 138 | 431 | 268 | 298 | 48 | 30 |
| 6. புத்தளம் | (1981) ... | உலக வங்கி | 378 | 159 | 537 | 356 | 412 | 72 | 56 |
| 7. பதுளை | (1982) ... | வே. அ. ப. நி. | 310 | 77 | 387 | 141 | 200 | 49 | 59 |
| 8. வவுனியா | (1984) ... | உலக வங்கி | 246 | 133 | 379 | 62 | 71 | 14 | 9 |
| 9. மன்னார் | (1984) ... | உலக வங்கி | 220 | 118 | 338 | 50 | 58 | 18 | 8 |
| 10. இரத்தினபுரி | (1984) ... | நெதர்லாந்து | 80 | — | 80 | 22 | 53 | 19 | 31 |
| 11. மொனறாகலை | (1984) ... | நொராட் | 500 | 16 | 516 | 29 | 50 | 22 | 21 |
| 12. முல்லைத்தீவு | (1985) ... | நெதர்லாந்து | — | — | — | 3 | 3 | 3 | — |
| 13. கேகாலை | (1986) ... | வே. அ. ப. நி. | 266 | 143 | 409 | 0.5 | 6 | — | 5.5 |

(அ) நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டைக் குறிக்கிறது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சு.